# சின்னஞ்சிறு விளம்பரம்

### கிரக சேர்க்கை

1-1-92 முதல் 10 2.92 வரை தனுராசியில் செவ்வாய் மாற்றம் யூரேனஸ், நெப்ரியூன், புளூட்டோ ராகுக்களின் திடசேர்க்கையால் விஷமுனின் சுபார்வையைப் பெறுவதால் பாரிய விளைவுகளை உண்டாக்காது: 1992 ஆம் ஆண்டு அமைதி நிலவும். செவ்வாய் மாற்றம் ரூபா 7/- ரகுநாதன் பதிப்பகம் யாழ்ப்பாணம்; (Prof; சத்தியதாஸன்) [18949]

### A/L கணக்கியல் புத்தகம்

கணக்கியல் கொள்கைகளும்; கணக்கீட்டு நியமங்களும் ஆசிரியர்: பா.பாலச்சந்திரன், விரிவுரையாளர், யாழ்; பல்கலைக்கழகம்; பக்கங்கள் 165, விலை 65ரூபா, கிடைக்கும் இடங்கள்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, மண்டேலா ரேடர்ஸ், அறிவகம்: [19020]

### அச்சு இயந்திரம் உடன் தேவை

பிளேட்டின் (Platin) அச்சு இயந்திரம் உடன் தேவை; விலை விவரத்துடன் தொடர்பு கொள்ளவும், வ; முத்தக்குமாரசாமி, 432, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [C/1060]

## மக்கள் அஞ்சலி

யாழ்ப்பாணம், டிச.10

பலாலிப் பகுதியில் இடம் பெற்ற படையினருடனான மோதலில் வீரமரணமடைந்த லெப்டினட் தாக்குதல் படைப்பிரிவுத் தளபதி மேஜர் இளங்கோ (வல்லிபுரம் மன்மதநாதன்) மற்றும் வீரவேங்கை இன்பராஜ் (தங்கராசா ஜெயசீலன்) ஆகிய இரு வீரவேங்கைகளின் புகழுடல்கள் நேற்று நெல்லியடி பஸ் நிலையத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டன. இதற்கு முன்னர் நவிபகலில் புகழுடல்கள் அச்சுவேலி பஸ்நிலையத்தில் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டிருந்தன.

வடமராட்சியின் பல பகுதிகளினூடாகவும் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்ட இவர்களின் புகழுடல்களுக்கு பெருந்தொகையான மக்கள் கண்ணீர் சொரிய அஞ்சலி செலுத்தினார்கள்; (த-11)

## பூநகரிக்கான தபால் விநியோகம்

கிளிநொச்சி, டிச.10

பூநகரிப் பகுதிக்கான தபால் விநியோகம், தற்போது உருத்திரபுரம் உபதபாலகத்தில் நடைபெறுவதாக அறிவிக்கப்படுகிறது.

பூநகரித் தபாலகம் அக்டோபர் மாதம் இடம்பெற்ற வான் தாக்குதலில் சேதமடைந்ததைத் தொடர்ந்தே இந்தத் தற்காலிக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது; (த)

## கொழும்பில் பரீட்சை

கொழும்பு, டிச. 10

வடபகுதியில் இருந்து இடம்பெயர்ந்து கொழும்பில் தங்கியுள்ள 210 ஜி. சி. ஈ சாதாரணதர இறுதியாண்டு மாணவர்களுக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை வழங்க தம் முழுமையான ஏற்பாடுகள் செய்திருப்பதாக பரீட்சை ஆணையாளர் ஆர்தர் வெதமுல்ல நேற்று முன்தினம் தெரிவித்தார். (த)

---

## நன்றி நவிலல்

### Ayur. டாக்டர் முத்துக்கிருஷ்ணபிள்ளை சுவாமிநாதர்

எமது குடும்பத் தலைவர் முத்துக்கிருஷ்ணபிள்ளை சுவாமிநாதர் அவர்கள் காலமான செய்தி கேட்டு 29-10-1991 அன்று நடந்த மரணக் கிரியைகளில் வந்து கொண்டோர், சகல விதங்களிலும் ஒத்தாசை புரிந்தோர் மற்றும் பின்னர் அறிந்து அனுதாபங்களை நேரில் தெரிவித்தோர் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியினைத் தெரிவிக்கிறோம்;

மனைவி, மக்கள்.

முத்துகிருஷ்ணர் வீதி,
சுன்னாகம். (19016)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 18 -- 05 -- 1904

மறைவு: 10 -- 11 -- 1991

### அமரர் தம்பிப்பிள்ளை முத்துத்தம்பி

(இளைப்பாறிய கச்சேரி நிர்வாக உத்தியோகத்தர்- O. A.)

எங்கள் இதய தீபமே! நீங்கள் மறைந்து 31 நாட்கள் ஓடிவிட்டதே! இன்னமும் ஆறவில்லை எங்கள் மனம், ஓயவில்லை எங்கள் கண்ணீர்; எங்கள் குடும்பத்தில் ஒளி விளக்காய் வழி நடத்திய அன்புத் தெய்வமே! உங்களது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்;

உங்கள் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

'ஈஸ்வர இல்லம்',
மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை. (19011)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 17 — 9 — 1962

மறைவு: 21 — 11 — 1990

### அமரர் செல்லர் தவராசா

திதி: 10-12-1991

தவப்பயனால் வந்துதித்த
தவப்புதல்வா! தவராசா - இத்
தரணியில் உனைப் பிரிந்து
வாழ்வதுவோ எவ்வாறு
மணவாளக் கோலத்திலே
மணவறையில் நீயிருக்க
மங்கையவள் அருகமர்ந்த
மன்மதனைக் கண்ணோக்க
எண்ணமிகு நினைவலையில்
எம்மவர்கள் நினைத்திருக்க
என்றென்றும் நீங்காத வெந்துயரில்
எமையாழ்த்தி எங்கே நீ சென்று விட்டாய்
எம்மருமை மதனே!

ஓம்! சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உன்பிரிவால் வாடும்:
அப்பா, அம்மா, அக்காமார்,
அண்ணா, தம்பிமார், மைத்துனர்,
மைத்துனி, மருமக்கள், பெறாமக்கள்,
உற்றார், உறவினர்கள்.

வயாவிளான் தெற்கு,
வயாவிளான். [19007]

---

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 20 — 06 — 1962

மறைவு: 10 — 12 — 1989

### செல்வன் கணபதி செல்வநாயகம்

எங்கள் சிறப்பே உங்கள் சிறப்பென்று
எல்லோருடனும் பழகும் இனியவனே
பகையறியா பண்புடையவனே
எங்கள் கண்ணிமை மூடாமல் - உனை நினைந்து
உன்னைக் காலம் உதிரம் கொட்டுதையா
ஈராண்டு சென்றாலும் உன் நினைவு அகலாதையா
உத்தமனே உன் வதனம் காணாமல் தவிக்கின்றோம்

உங்கள் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

கைதடி மத்தி, கைதடி. [19015]

---

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 15 - 10 - 1924

மறைவு: 21 - 11 - 1990

### திருமதி அப்புத்துரை சிவபாக்கியம்

திதி: [illegible]0 - [illegible]2 - 1991

ஆண்டுகள் பல ஓடி மறைந்தாலும் - அம்மா!
உங்கள் பாசம் மிக்க நினைவுகள்
என்றுமே எங்களை விட்டு நீங்கா.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்;

கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

பார் லேன்,
தெல்லிப்பழை. [18944]

---

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 18 — 03 — 1948

மறைவு: 10 — 12 — 1990

### அமரர் ஆறுமுகம் குணரத்தினம்

(LL. B; Attorneyat Law - முன்னாள் பதில் உதவிப் பதிவாளர், யாழ். பல்கலைக்கழகம்)

மாண்புமிகு மைந்தனே மகிமை சித்திரமே
மானத்துடன் நீர் வாழ்ந்து மறைந்தது தான் விசித்திரமே
மனதார ஏங்குகிறோம் கண்ணில் நீர் இல்லாமல்
மண்ணைவிட்டு போனாலும் எம் மனதைவிட்டு போவீரோ;

மனைவி, பிள்ளைகள்.

[illegible] வீதி,
[illegible], சாவகச்சேரி. [18947]

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில்: 1968 — 06 — 25

விண்ணில்: 1991 — 11 — 10

### செல்வி கந்தசாமி இஸ்ணகுமாரி

அன்பின் வடிவமே ஆருயிர் பாசமே
எம்மை மறந்தனையோ இராசாத்தி
அன்பே ஆருயிரே உம் திரு உருவம்
எம்மை வருத்த அமரராகினையோ இராசாத்தி
தந்தை தாய் சகோதரரை பரிதவிக்கவிட்டு
அமரராகினையோ இராசாத்தி
எம்மை எல்லாம் ஏங்கவிட்டு
இறைவனடி சேர்ந்தனையோ இராசாத்தி
ஆறாத் துயரை எமக்களித்து
நீங்காத்துயில் கொண்டனையோ இராசாத்தி
கொடு நோய்க்கு ஆளாகி
அமரராகினையோ இராசாத்தி
அபிலாஷைகள் நிறைவுறா இளம் வயதில்
அமரராகினையோ இராசாத்தி
இஸ்ணா இஸ்ணா என்றழைக்கும்
எம்மை விட்டு நீங்கினையோ இராசாத்தி
இஸ்ணா இஸ்ணா என்றழைக்கும்
நண்பிகளை விட்டு நீங்கினாயோ இராசாத்தி
அன்பே இராசாத்தி!
உம் ஆத்மா சாந்திபெற இறைஞ்சுகிறோம் இராசாத்தி

நன்றி நவிலல்:

செல்வி கந்தசாமி இஸ்ணகுமாரியின் ஈமக்கிரியைகளில் பங்கு பற்றி, எமக்கு சரீர உதவி, ஆறுதல், அனுதாபம் செலுத்திய எல்லோர்க்கும், எமது நன்றியை தெரிவித்துக் கொண்டு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

ஏ. சி. கந்தசாமி குடும்பத்தினர்.

75, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம். [19022]

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக்கிரியையும்



மலர்வு: 16 — 04 — 1911

உதிர்வு: 10 — 11 — 1991

### அமரர் ம. சி. பொன்னம்பலம்

(ஓய்வு பெற்ற அதிபர்)

திதி: 10—12—1991

மாணவர்கள் வாழ்ந்தும் வண்ணம்
அறிவொளியை ஏற்றினாய்!
மாநிலத்தோர் ஏற்கும் வண்ணம்
பணிகள் பல ஆற்றினாய்!!
மன்றுளாடும் கணபதிக்கு குன்
உயிர் மலரைச் சூட்டினாய்!
இன்றுமென்றும் எம்மை யெல்லாம்
துயர்க் கடலில் ஆழ்த்தினாய்!!
பொன்னம்பலம் ஐயா உங்கள்
நினைவை யென்றும் போற்றுவோம்!
பொன்னம்பலம் ஐயா உங்கள்
அன்பையென்றும் போற்றுவோம்!!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

07, சுவாமிநாதர் வீதி,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். [19012]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## ஈழத் தமிழரின் மனித உரிமைகள்

இன்று - டிசம்பர் பத்தாம் திகதி — மனித உரிமைகள் தினமாகும் இற்றைக்கு 43 வருடங்களுக்கு முன்னர் ஐக்கிய நாடுகள் சபையினால் சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம் வெளியிடப்பட்டது.

அதன் பின்னர் — மூன்று தசாப்தங்கள் கடந்து 1976 ஆம் ஆண்டில் — மனித உரிமைகள் சர்வதேசச் சட்டம் இயற்றப்பட்டது: அந்தச் சட்டத்தில் (அ) பொருளாதார, சமூக, கலாசார உரிமைகள் சம்பந்தமான சர்வதேச சாசனமும், [ஆ] சிவில் அரசியல் உரிமைகள் சம்பந்தமான சர்வதேச சாசனமும், அதனை அமுல் செய்வதற்கான [இ] ஆணையும் அடங்குகின்றன.

மனித உரிமைகள் மனித வாழ்வின் இருதயம் போன்றவை. அவை மகத்துவமானவை. எனவே மனித உரிமைகளை அனுபவிக்கும் மக்கள் இன்றைய தினத்தை மனநிறைவுடன் நினைவு கூருவர். ஆனால் மனித உரிமைகள் மறுக்கப்பட்ட மக்கள்...? தங்களது குறைபாடுகளை, தாம் மனித உரிமைகளை அனுபவிக்க முடியாமல் தடுக்கப்படுவதை ஏனைய மக்களுக்கு கவலையுடன் தெரிவிக்க வேண்டிய நாள்.

ஈழத் தமிழர்களைப் பொறுத்த வரையில், தமது மனித உரிமைகள் எவ்வாறு மறுக்கப்படுகின்றன. நசுக்கப்படுகின்றன என்பதை சர்வதேச சமூகத்துக்கு அம்பலப்படுத்த வேண்டிய நாள்

ஸ்ரீலங்காவும் ஐக்கிய நாடுகள் சபையின் அங்கத்துவ நாடுகளில் ஒன்று! ஐ. நா.வின் சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தை ஏற்றுக் கொண்ட நாடு! அது மட்டுமா..? அந்தப் பிரகடனத்துக்குத் தான் மதிப்பளிப்பதாகக் காட்டிக் கொள்வதற்காக, தனது அரசமைப்புச் சட்டத்தில் பிரகடனத்தின் பல சரத்துகளையும் சேர்த்துள்ளது! ஆனால் சிவில் அரசியல் சாசனத்தில் உள்ள சரத்து எதுவும் சேர்க்கப்படவில்லை.

சிவில், அரசியல் சர்வதேச சாசனத்தின் முதலாவது சரத்தே மக்களின் சுயநிர்ணய உரிமைக்கு உத்தரவாதம் அளிக்கிறது!

''சகல மக்களும் சுயநிர்ணய உரிமை கொண்டவர்கள். அந்த உரிமைக்கு அமைவாக அவர்கள் தங்கள் அரசியல் அந்தஸ்தை சுதந்திரமாகத் தீர்மானிக்கவும், அதன் தொடராக பொருளாதார, சமூக, கலாசார அபிவிருத்திகளை மேற் கொள்ளவும் உரித்துடையவர்கள்'' என்பதே அந்தச் சரத்தாகும்.

ஒவ்வொரு மனிதனுக்கும் வாழ்வுரிமை பிறப்புரிமையாகும். அந்த உரிமை சட்டத்தினால் பாதுகாக்கப்பட்டு உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும் தனிநபர் எவரினதும் வாழ்வுரிமை தன்னிச்சையாக மறுக்கப்படக் கூடாது— என்பது சிவில் அரசியல் உரிமை சாசனத்தின் ஆறாவது சரத்தாகும்

மேற்கண்ட இரண்டு உரிமைகளும் ஈழத்தமிழர்களுக்கு மறுக்கப்பட்டுள்ளன. தனி மனித ரீதியிலும், இன ரீதியிலும் அந்த உரிமைகளை வழங்க ஸ்ரீலங்கா அரசு மறுத்து வருகிறது.

ஆகையால் ஒவ்வொரு தமிழனும்; தனிப்பட்ட மனிதர் என்ற வகையில் தமக்கு இந்த உரிமைகள் கிடைக்க ஆவன செய்யுமாறு ஐ நா.வின் மனித உரிமைகள் [18 நாடுகள்] குழுவுக்கு அறிவிக்க வேண்டும் அதனை ஒரு போராட்ட இயக்கமாகத் தொடங்குவதற்கு ஈழத்தமிழர்கள் இன்றைய தினத்தில் உறுதி பூண வேண்டும்.

# 80 வீதமான மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றினர்

யாழ்ப்பாணம், டிச. 10

யாழ். மாவட்டத்தில் நேற்று ஆரம்பமான ஜி. சீ. ஈ. [சாதாரண] தரப் பரீட்சைக்கு 80 வீதமான மாணவர்கள் தோற்றியதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

சுமுகமான முறையில் பரீட்சை நடைபெற்றதாகவும், சகல தாப்பினரின் ஒத்துழைப்பும் கிடைத்ததாகவும் வட பிரதேச கல்வி பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் தெரிவித்தார்:

இந்தப் பரீட்சைக்கான இரண்டாவது தொகுதி வினாத்தாள்களை உடன் அனுப்ப ஏற்பாடுகள் செய்யுமாறு பணிப்பாளர் அவசர செய்தி ஒன்றை பரீட்சை ஆணையாளருக்கு நேற்று அனுப்பியுள்ளார். (ஓ 8)

# அச்சுவேலி, இடைக்காடு மாணவரும் தோற்றினர்

அச்சுவேலி, டிச. 10

ஜி சீ ஈ. (சா/த) பரீட்சைக்கு அச்சுவேலி, இடைக்காடு பகுதிகளில் அமைக்கப்பட்டிருந்த பரீட்சை நிலையங்கள் அச்சுவேலிக்கு வெளியே ஏழு வெவ்வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டன.

அச்சுவேலிக்குச் சமீபமாக இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதை அடுத்தே இந்த மாற்றம் செய்யப்பட்டது.

ஆவரங்கால், புத்தூர், நீர்வேலி, வாதரவத்தை, அச்செழு, சரந்தன், தோப்பாய் ஆகிய பகுதிகளுக்கே இந்தப் பரீட்சை நிலையங்கள் மாற்றப்பட்டன.

பரீட்சை நிலைய, இடமாற்றம் பற்றிய அறிவித்தல்கள் மாணவர்களுக்கு உரிய காலத்தில் கிடைக்காத போதிலும், அவர்கள் தமக்கு ஒதுக்கப்பட்ட நிலையங்களை தேடி, அறிந்து கண்டுபிடித்து, பரீட்சைக்குத் தோற்றினர். [உ-11]

# மதிய உணவு அருந்தாமல் பரீட்சை எழுதிய மாணவர்

யாழ்ப்பாணம், டிச. 10

நேற்று ஆரம்பமான ஜி. சீ. ஈ. (சாதாரண தர) பரீட்சைக்குத் தோற்றிய யாழ். நகரப் பாடசாலை ஒன்றின் மாணவர்கள்— நேற்றைய மூன்று பாடங்களையும்— மதிய உணவு உட்கொள்ளாமலேயே எழுத வேண்டியதாயிற்று.

யாழ். நகரின் பிரபல பாடசாலை ஒன்றின் பரீட்சை மண்டபத்தில் இச்சம்பவம் நடந்தது.

அந்த மண்டபத்தில் திட்டமிட்டபடி காலை 8 30 மணிக்கு ''தமிழ் மொழியும் இலக்கியமும் I'' வினாத்தாள் வழங்கப்பட்டது. அப்பரீட்சை 9.15க்கு முடிவுற்றதும் அடுத்து வழங்க வேண்டிய ''தமிழ் மொழியும் இலக்கியமும் II'' வினாத்தாளுக்குப் பதிலாக மேற்பார்வையாளர்கள் ''தமிழ் மொழியும் இலக்கியமும் III வினாத்தாள் பொதியை உடைத்து மாணவர்களுக்கு விநியோகித்து விட்டனர்.

தவறு உடனடியாகக் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து, மாணவருக்கு வழங்கப்பட்ட வினாத்தாள் திரும்பப் பெறப்பட்டது ''பகுதி II'' வினாத்தாள் மீண்டும் வழங்கப்பட்டது; அந்தப் பரீட்சை நண்பகல் 11 45 மணிக்கு முடிவுற்றது;

எனினும் நண்பகல் 1 மணிக்கு— மதிய போசன இடைவெளிக்கு முன்னர் எழுதப்பட வேண்டிய ''பகுதி III'' வினாத்தாளை மாணவர்கள் பார்வையிட்டு விட்டதால், நண்பகல் மதிய போசனத்துக்கு வீட்டுக்குச் செல்ல அவர்கள் அனுமதிக்கப்படவில்லை.

ஒரு குவளை தண்ணீருடன் பிற்பகல் மூன்று மணி வரை இருந்து ''பகுதி III'' பரீட்சையை முடித்துக் கொண்டு மாணவர்கள் வீடு திரும்பியதாகத் தெரிவிக்கப்பட்டது.

## தமிழரின்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வப்படவேண்டும்.

★ சட்டம்-ஒழுங்கு பேணப்படுதல், ஆயுதப் படைகள் மற்றும் அனைத்துத் துறைமுகங்கள், விமான நிலையங்கள் ஆகியன மத்திய அரசின் பொறுப்பிலேயே இருக்க வேண்டும்.

—ஜனாதிபதி பிரேமதாஸாவிடம் பௌத்த குருமார்கள் சமர்ப்பித்த மாஜரில் இந்த ஐந்து நிபந்தனைகளும் அடங்கியுள்ளன. [உ-எ]

## அமெ.---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கின்றன என்றும் —

அமெரிக்க இராணுவ வைத்தியக் குழுத் தலைவர்கள் தெரிவித்துள்ளனராம்.

போர்க்கடுமை, பாதிக்கப்பட்டவர்களை இடம்பெயரச் செய்வது, இரசாயன பாதிப்புக்குள்ளாகுதல், எரிகாயங்கள் மற்றும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு புனர்வாழ்வளித்தல் ஆகிய அம்சங்கள் பற்றியும் அமெரிக்காவின் நடமாடும் வைத்திய பயிற்சிக் குழு ஆராய்ந்தது என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ-எ]

## அமைதியை---

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

றார். திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா உட்பட எதிர்க்கட்சிகளின் தலைவர்களுக்கும் அதுபற்றிய விவரங்களை திரு. தொண்டமான் தெரியப்படுத்தியிருக்கிறார்.

அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வு ஒன்றைக் காணவேண்டும் என்பதே அனைத்துக் கட்சியினரின் விருப்பமாகும்;

அதற்காகவே அனைத்துக் கட்சி மாநாடு, நாடாளுமன்ற தெரிவுக்குழு ஆகியன அமைக்கப்பட்டுள்ளன.

தீர்வுக்கான யோசனைகளை அரசியல் கட்சிகள் இந்த அமைப்புகளிடம் சமர்ப்பிக்கலாம்.

தீர்வு ஒன்றைக் காணும் முயற்சியின் போது அந்த யோசனைகளும் பரிசீலனை செய்யப்படும். — என்றார்: [அ-எ]

## மன்னாரில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குண்டு வீச்சு நடந்த சமயம் 216 பரீட்சார்த்திகளும், கல்விப் பணிப்பாளர், பிரதேச உதவிப் பணிப்பாளர்கள், மேற்பார்வையாளர்கள் ஆகியோர் பாடசாலையில் குழுமி இருந்தனர், என்றும்—

பதற்றமடைந்த மாணவர்களும், ஏனையோரும் பாதுகாப்பான இடங்களில் தஞ்சமடைந்ததால், உயிரிழப்புகள் தவிர்க்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

உதவி மேற்பார்வையாளராகக் கடமையாற்றிய மன்னார், தச்சினாமருதமடு அ. த. க பாடசாலை அதிபரான திரு. பஸ்தியாம்பிள்ளை [illegible] ஆவார். [ஓ-3]

## இராமநாதன் நினைவுப் பேருரை

யாழ்ப்பாணம், டிச. 10

சேர். பொன். இராமநாதனின் நினைவு தினம் நாளை புதன்கிழமை யாழ். பல்கலைக்கழகத்தில் கொண்டாடப்பட உள்ளது

காலை மேணிக்கு பல்கலைக்கழக பரமேஸ்வரன் ஆலயத்தில் விசேட சங்காபிஷேகம் நடைபெறும்; பிற்பகலில் கைலாசபதி அரங்கில் நினைவுப் பேருரை இடம் பெறும்.

நினைவுப்பேருரை நிகழ்ச்சி கலைப்பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை தலைமையில் நடக்கும். பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் திரு. ஆர். என். நடராசா, ''இராமநாதன் கல்விச் சிந்தனைகள்'' என்னும் பொருளில் நினைவுப்பேருரை நிகழ்த்துவார்.

இராமநாதன் கல்லூரி, புதிய, பழைய மாணவிகள் சேர்ந்து வழங்கும் நாட்டியம், இராமநாதன் நுண்கலைக் கழகத்தைச் சேர்ந்த செல்வி மி. யசோதர குழுவினரின் பண்ணிசை நிகழ்ச்சி என்பனவும் நடைபெறும்;

யாழ். பல்கலைக்கழக ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலய அறங்காவலர் சபையினர் நினைவு தின நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்துள்ளனர். (ஸ)

## ரயில் விபத்தில் 26 பேர் பலி

புதுடில்லி, டிச. 10

இந்தியாவின் ஹிமாச்சல் பிரதேசத்தில் நேற்று இடம் பெற்ற ரயில் விபத்தில் 26 பேர் கொல்லப்பட்டனர். மூன்று பெட்டிகள் முற்றாகச் சேதமடைந்தன. (இ)

## புங்குடுதீவு மாணவரின் உணவு முத்திரை

யாழ்ப்பாணம், டிச. 10

புங்குடுதீவு கொத்தணிப் பாடசாலை மாணவர்களுக்கான மதிய உணவு முத்திரைகள் நாளை காலை 9 மணிக்கு செட்டித்தெரு (கின்னர் ஒழுங்கை) சி: சி. பாடசாலையில் வைத்து வழங்கப்படும். கொத்தணி அதிபர் திரு. க. பேரம்பலம் இத்தகவலை உதயனுக்குத் தெரிவித்தார். [ஜ-3]

## அப்பா---

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

டாரநாயக்கா இதனை அந்தப் பேட்டியில் மறுத்துள்ளார்.

''கட்சியின் தலைமைப் பதவியில் ஆசை வைத்து சந்திரிகா கட்சியில் இணையவில்லை. கட்சியைப் பலப்படுத்தவே அவர் எம்முடன் சேருகிறார்.

''அனுரா கட்சித் தலைமைக்கு வருவதற்கு ஆபத்து விளைவிக்கும் நபராகத் தாம் இருக்கப்போவதில்லை என்பதை அனுரவுக்கு நேரில் சந்திரிகா உறுதியளித்திருக்கிறார்.

''சந்திரிக்கா எமது கட்சியில் சேர்வதை தாம் எந்த வகையிலும் எதிர்க்கவில்லை என்று அனுராவே என்னிடம் கூறினார்.

''ஆனால் சந்திரிகா குழுவைச் சேர்க்க நான் இப்போது முடிவு செய்தபோது அவர்கள் திரும்பி நின்று கட்சி பிளவுபடும் என்கிறார்கள்.

''ஸ்தாபிக்கப்பட்ட ஒரு கட்சி மேலும் பலரைச் சேர்த்துக் கொள்ளும் போது பிளவுபட்டுப் போகும் என்று கூறுவதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

''அரசாங்கம் தான் ஸ்ரீ. ல. சு. கட்சி வலுவடைவதைப் பிடிக்காமல் எமது கட்சிக்குள் [illegible] முயற்சிக்கிறது'' — இப்படி திருமாவோ கூறினார். (உ-3)

# லலித் அணியினருடன் அனுரா இணைவார்?

கொழும்பு, டிச. 10

ஐ. தே. கவிலிருந்து வெளியேறி புதிய கட்சியை ஆரம்பித்திருக்கும் லலித்—காமினி அணியுடன், திரு: அனுரா பண்டாரநாயக்காவும் இணைவாராம்.

— இப்படி கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பரவலாகப் பேசப்படுகிறது;

''தங்களின் தலைமையின் பெரும் எண்ணிக்கையான ஸ்ரீ. ல. சு. க உறுப்பினர்கள் கட்சியை விட்டு வெளியேறி, ஐ. தே. க. அதிருப்தியாளர்களுடன் இணைவாராம் என்று பேச்சு அடிபடுகிறதே, அது உண்மையா?'' — என்று திரு. அனுரா பண்டாரநாயக்காவிடம் கேட்டபோது —

''அரசியலில் எதுவும் நடக்கலாம்: ஆனால் தற்போதைய நிலையில் ஸ்ரீ. ல. சு: கட்சிக்குள் தொடர்ந்து நிலவிவரும் நெருக்கடிக்கு நிலையான தீர்வைக் காண்பதிலேயே நான் இருந்தை கொண்டுள்ளேன். என்ன நடக்கிறது என்று இருந்து பார்ப்போம்;'' — என்று அவர் பதிலளித்தார்;

## மனித உரிமைகள் தினம்:

# இன்று ஆர்ப்பாட்டங்களும் கூட்டங்களும் - கொழும்பில்

கொழும்பு, டிச. 10

உலக மனித உரிமைகள் தினத்தை ஒட்டி இன்று செவ்வாய்க்கிழமை கொழும்பில் கூட்டங்கள் மட்டுமன்றி ஆர்ப்பாட்டங்களும் நடைபெறவுள்ளன.

ரதமலானையில் எதிர்க்கட்சிகள் கூட்டாக பொதுக் கூட்டம் ஒன்றை நடத்துகின்றன; இதேவேளை—

புதிய நகர மண்டபத்தில் 23 மனித உரிமை அமைப்புகள் தனியாக மனித உரிமை தினக் கூட்டம் ஒன்றை நடத்துகின்றன.

இதனையொட்டி ஐக்கிய தொழிலாளர் சம்மேளனம், மனித உரிமை பாதுகாப்புக் கழகம் ஆகியன ஆர்ப்பாட்டங்களை நடத்தவும் திட்டமிட்டுள்ளன; (ஆ-எ)

# வடக்கே மேலும் சில பகுதிகள் எமது கட்டுப்பாட்டில் வரும்

## கொப்பேகடுவ கூறுகிறார்

வடபகுதியில் மேலும் சில பகுதிகளை எமது கட்டுப்பாட்டில் கொண்டுவரத் திட்டமிட்டுள்ளோம்; இதற்கென சில பகுதிகளையும் நாம் தெரிவுசெய்துள்ளோம்; வடபகுதியில் மீண்டும் இராணுவ நடவடிக்கைகள் இடம் பெறும்;

வடபகுதி இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார் என நேற்றைய கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

வடக்கே இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் தற்போது பயங்கரவாத நடவடிக்கை எதுவும் இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்; [இ-த]

# ஆயுத விநியோக வேலை கடற்படைக்கு கஷ்டமாம்!

## தளபதி கிளான்ஸி கூறுகிறார்

கொழும்பு, டிச. 10

போர் முனைகளில் உள்ள இராணுவத்தினருக்கு ஆயுதம் மற்றும் தளபாடங்களை விநியோகம் செய்வதே கடற்படையினருக்கும் விமானப் படையினருக்கும் இப்போது கஷ்டத்தை ஏற்படுத்தியிருக்கிறது:

— இவ்வாறு கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் கிளான்ஸி பெர்னாண்டோ கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றுக்குத் தெரிவித்தார்.

கடற்படையின் பலத்தை விரிவுபடுத்த வேண்டியதன் அவசியத்தையும் அந்தப் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் அவர் வலியுறுத்தியிருக்கிறார்; (உ-எ)

# அதிகளவு மருப்பு வகைகள் கப்பலில் வந்து சேரும்

யாழ்ப்பாணம், டிச. 10

யாழ். மாவட்டத்துக்கு கப்பலில் அதிகளவில் பருப்பு வகைகள் அனுப்பப்படவிருக்கின்றன;

போசாக்கான— புரதச் சத்துடைய உணவுப் பொருள்களான சோயா, கௌபி, உழுந்து, பயறு வகைகள் கடுதலாக அனுப்பப்படாததால், வடபகுதி மக்களின் போசாக்கு நிலை பாதிக்கப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது:

அடுத்த வாரம் இங்கு வந்து சேரவிருக்கும் கப்பலில் அரிசி, மா, சீனிக்கு பதிலாக கூடுதலாக புரதச்சத்து பொருள்களே அனுப்பப்படவிருக்கின்றனவாம்.

அதன்பின்னர் அரிசி, சீனி என்பனவற்றை ஏற்றிக்கொண்டு மற்றொரு கப்பல் பருத்தித்துறை வந்து சேரும் என அறியப்படுகிறது; (ஒ-3)

## மா கப்பல் வந்து சேர்ந்தது

யாழ்ப்பாணம், டிச. 10

திருகோணமலையிலிருந்து 2 ஆயிரம் மெற்றிக் தொன் மாவுடன் ''ஹெற்தல'' கப்பல் நேற்றுக் காலை பருத்தித்துறை வந்து சேர்ந்தது. கப்பலிலிருந்து மா மூடைகளை இறக்கும் வேலைகள் இன்று ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது;

கொழும்பு சென்றிருந்த யாழ். அரச அதிபர் திரு. கே. மாணிக்கவாசகரும் இந்தக் கப்பல் மூலம் யாழ். திரும்பினார்; (உ-3-5-165)

## தமிழ் கைதிகள் இடமாற்றம்

கொழும்பு, டிச. 7

பூஸா முகாமில் வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகள் வேறு இடத்திற்கு மாற்றப்படுவார்கள் என்று பிரதமரும் பாதுகாப்புத்துறை அமைச்சருமான திரு. டி. பி. விஜேதுங்க தெரிவித்துள்ளார்:

பூஸா முகாமில் 80 தமிழ் கைதிகள் உள்ளனர்; [இ - எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

"பாலம்" பொதுப்பணி மன்றத்தின் அமைந்துள்ள உணவகத்திற்கு உணவு வகைகள், சிற்றுண்டிகள் தயாரிப்பதற்கு அனுபவம் மிக்க சமையற்காரர்கள், உதவியாளர்கள் தேவை.

திங்கள், புதன், வெள்ளி, ஆகிய நாட்களில் காலை 9 மணி முதல் நண்பகல் 1 மணிக்கு இடையில் நேரில் வரவும்; வேதனம் பேசி முடிவெடுக்கப்படும்.

'பாலம்'
572, மருத்துவமனை சாலை,
யாழ்ப்பாணம்.

[19023]


## தமிழகத்தில் புலிகளுக்கு உதவி வழங்க தமிழ் தேசியப் படை திட்டமிட்டிருந்ததாம்!

சென்னை, டிச. 10

தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளுக்கு உதவுவதற்காக, தமிழ் தேசிய மறுமலர்ச்சிப் படை என்னும் இயக்கம் தமிழ் நாட்டின் இல பகுதிகளைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்குத் திட்டமிட்டிருந்தது.

அண்மையில் கைதான வீரகுமார் அல்லது ஸ்ரீகாந்த் [வயது 24] என்ற இளைஞரிடம் தமிழ் நாடு பொலீஸார் மேற்கொண்ட விசாரணையின் போது இது பற்றித் தெரியவந்ததாகக் கூறப்படுகிறது.

திராவிட கழக உறுப்பினரான இவர் உடுமலைப்பேட்டைக்கு அருகேயுள்ள தாழி கிராமத்தைச் சேர்ந்தவர்.

இவர் இலங்கையின் வடபகுதிக் காட்டில் புலிகளிடம் ஆயுதப் பயிற்சி பெற்றவர் என்றும் —

இவர் கைதானதை அடுத்து ஆயுதங்கள், வெடிகுண்டுகள், தொலைத்தொடர்புக் கருவிகள் என்பன கைப்பற்றப்பட்டன என்றும் தமிழ் நாடு பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-ற)

## செஞ்சிலுவைப் பிரதிநிதி ஜெனிவா விரைந்தார்

செஞ்சிலுவைச் சங்கச் சர்வதேசக் குழுவின் இலங்கைப் பிரிவுத் தலைவர் பியரே வெற்றாச் இரண்டு வார கால உத்தியோக பயணம் ஒன்றை மேற்கொண்டு ஜெனிவா சென்றிருக்கிறார்.

இலங்கையின் பிந்திய நிலைவரம் பற்றி அவர் செஞ்சிலுவைச் சங்கத் தலைமைக் காரியாலய அதிகாரிகளுக்கு விளக்கிக் கூறுவதற்கே அவர் சென்றுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.


## யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம் பாடசாலை அபிவிருத்திச் சபை பொதுக்கூட்டம் 1991-1992

மேற்படி கூட்டம் எதிர்வரும் 15-12-91 ஞாயிறு காலை 10.00 மணிக்கு கல்லூரியில் நடைபெறும். சகல பெற்றோர்களையும் ஆசிரியர்களையும் சமூகம் தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பொ. தர்மேந்திரன் — செயலாளர்
மு இராமலிங்கம் — அதிபர்
[19024]



## சேர். பொன். இராமநாதன் குருபூசை

நிகழும் கார்த்திகைத் திங்கள் 25 ஆம் நாள் [11-12-91] புதன்கிழமை திருவோண நட்சத்திரம் கூடிய நன் நாளில் இராமநாதன் கல்லூரியில் அமைந்துள்ள இராமநாதேஸ்வர ஆலயத்தில் சேர். பொன். இராமநாதனுடைய குருபூசை விசேட அபிஷேகம், பூசையுடன் நடைபெற உள்ளது. பழைய மாணவிகள், அபிமானிகள் அனைவரையும் குருபூசையில் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவிகள்.
இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்.
[18615]


புலிகளின் ஆயுதக்கப்பல் விவகாரம்:

## இலங்கை பொலீஸ் குழு தமிழ்நாட்டில் விசாரணை

சென்னை, டிச. 10

இந்தியக் கடற்படையினரால் கடந்த மாதம் கைப்பற்றப்பட்ட "டொங் கோவா" என்ற புலிகளின் ஆயுதக் கப்பல் பற்றி தமிழ் நாடு பொலீஸாருடன் புலனாய்வுத் தகவல்களைப் பரிமாறிக் கொள்ள இலங்கையிலிருந்து பொலீஸ் குழு ஒன்று கடந்த புதன்கிழமை சென்னை சென்றுள்ளது.

உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் எல். எல். தயானந்த பண்டார தலைமையில் சென்றுள்ள இந்தக் குழுவில் இன்ஸ்பெக்டர் ஒருவரும், சப் இன்ஸ்பெக்டர் ஒருவரும் அங்கம் வகிக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இக்குழுவினர் புலிகள் பற்றி விசாரணை நடத்தும் தமிழ் நாடு கியூ பிரிவுப் பொலீஸாருடனும் அதிகாரிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தினர் என்றும் —

மேலும் அவர்கள் இந்தக் கப்பலின் கப்டன் பாலனையும், பொறியியலாளரான விவேகானந்தனையும் விசாரணைக்குட்படுத்தினர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.


## யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி
## ஆறாம் ஆண்டு
## அனுமதிக்கான விண்ணப்பமும் பரீட்சையும்-1992

மேற்படி வகுப்பின் அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவத்தை பாடசாலை அலுவலகத்தில் மு.ப. 9-00—11-30க்கிடையில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி 25 - 12 - 1991

விண்ணப்பங்களை பாடசாலை அலுவலகத்தில் மேற்படி நேரத்தில் ஒப்படைக்கலாம்.

தெரிவுக்கான பரீட்சை 29 - 12 - 1991 காலை 8-30 மணிக்கு நடைபெறும்.

த. முத்துக்குமாரசாமி, அதிபர்.
[19019]



## ★ G. C. E. O/L

ஆண்டு 9, 10

வகுப்புகள் ஆரம்பம்:
11 - 12 - 1991 [9-00 மணி]

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | ... | இரா. செல்வவடிவேல் |
| கணிதம் | ... | கதிர் |
| வர்த்தகம் | ... | இந்திரன் |
| தமிழ் | ... | ரவி |
| சமூகக்கல்வி | ... | ராஜன் |
| ஆங்கிலம் | ... | கிரி |

புதிய உயர் கல்லூரி,
(New College of High Studies)
ஆரியகுளம் சந்தி, — யாழ்ப்பாணம்.
[இ-0993]


## அம்பாறை, வவுனியாவில் உள்ளூராட்சித் தேர்தல்!

### விரைவில் நடக்கும் என்கிறார் அமைச்சர்

கொழும்பு, டிச. 10

அம்பாறை மாவட்டத்தில் நகரசபை, மற்றும் பிரதேச சபைகள், வவுனியாவில் நகர சபை ஆகியவற்றுக்கான தேர்தல்களை நடத்துவதற்கான சூழ்நிலை தற்பொழுது ஏற்பட்டிருப்பதாக புனர்வாழ்வு, புனர்நிர்மாண மற்றும் சமூக நல அமைச்சர் பீ. தயாரத்தின செய்தியாளர் மகாநாட்டில் தெரிவித்தார்.

சிவில் நிர்வாகம் மீண்டும் ஏற்படுத்தப்பட்டுள்ள இந்தப் பகுதிகளில் விரைவில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவது பற்றி அரசாங்கம் தற்பொழுது பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகிறது என்றும் அமைச்சர் அங்கு குறிப்பிட்டார்.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான புனர்வாழ்வுத் திட்டங்களுக்கென 86 கோடி 60 லட்சம் டொலர் வெளிநாட்டு உதவியாக பெறப்பட்டுள்ளது என்றும், இதில் 10 கோடி டொலர் செலவிடப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் மேலும் சொன்னார். [ஒ-எ]

## மாட்டிறைச்சி கடைக்கு 'சீல்'

தென்மராட்சி, டிச. 10

கலாசாரத்துக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய மாட்டிறைச்சியை விற்பனை செய்ததாகக் கூறப்படும் கடை ஒன்றை விடுதலைப் புலிகள் மூடி 'சீல்' வைத்தனர்.

சாவகச்சேரி நகரிலுள்ள இறைச்சிக் கடையே கடந்த வாரம் இவ்வாறு 'சீல்' வைக்கப்பட்டது. [ஒ-117]


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்:
17 - 7 - 1928

மறைவு:
10 - 11 - 1991

அமரர் சங்கரப்பிள்ளை கனகலிங்கம்
(ஓய்வுபெற்ற "இலங்கை" கம்பனி கிளை முகாமையாளர்)

பலரும் "இலிங்கம்" என புகழுடன் பாரினில்
அன்பனாய், அறிஞனாய், அறஞ்செய் மகிபனாய்,
கனகலிங்கமெனும் கண்ணிய மிகுந்த
மனேஜர் மாவிட வாழ்வினை நீத்து
அமைதியை அடைந்தார் அரன்-
கழலடைந்தாரே.

விண்ணுலகிற்கு ஏகிவிட்ட எமது அருமைத் தந்தையின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்!

மனைவி, பிள்ளைகள்,
மருமகன், பேரன் – பிரஷாந்.

இல. 6 பெரியமாவடி வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.
[18638]



## விஞ்ஞான பீடம்

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
இலங்கை

எல்லா வருடங்களையும் சேர்ந்த விஞ்ஞான பீட மாணவர்களுக்கான வகுப்புக்கள் டிசம்பர் 2ஆம் திகதி ஆரம்பமாகி விட்டன. இதுவரை வகுப்புக்கு சமுகமளிக்காத மாணவர்கள் உடனடியாக வந்து சேரும்படி வேண்டப்படுகிறார்கள்.

பல்கலைக்கழக விதிகளின்படி, ஆரம்பித்த நாளிலிருந்து (அதாவது 2-12-1991 இல் இருந்து) 4 கிழமைகளுக்குப் பின்னர் வரும் மாணவர்கள் வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார்கள்.

— பதிவாளர்
(இ/0995)


## புலிகள் பிரமுகர் நேபாளத்தில் கைது

காட்மண்டு, டிச. 10

ராஜீவ் காந்தி கொலை பற்றி விசாரணை நடத்தி வரும் விசேட புலனாய்வுக் குழுவினர், நேபாளத்தின் தலைநகரான காட்மண்டுவில் புலிகள் இயக்க முக்கியஸ்தரான திருச்சி ராஜா என்பவரை கைது செய்துள்ளனர் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது. [இ-த]

## லொறிகளில் உணவு

கொழும்பு, டிச. 10

முல்லைத்தீவுக்கும், கிளிநொச்சிக்கும் தலா 22 லொறிகளில் உணவுப் பொருள்கள் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன என்று கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு இந்த லொறிகளுக்கு பாதுகாப்பு வழங்கியதாகவும் தெரிவிக்கப்பட்டது. [இ-த]


## மரண அறிவித்தல்கள்

### கந்தையா வல்லிபுரம்

கந்தையா வல்லிபுரம் 9-12-1991 இல் காலமானார். அன்னார் காலஞ்சென்ற கந்தையா நாகம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வரும் காலஞ்சென்ற நாகம்மாவின் அன்புக் கணவரும் கம்மணி செல்லம்மா காலஞ்சென்ற அன்னமுத்து, சின்னம்மா, முத்துக்குமாரு, ராசம்மா, மீனாட்சி, நடராசா ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற பராசக்தி, த. பரமேஸ்வரி, பஞ்சநாதன் [பஞ்சு] [உரிமையாளர் ஜெனி மதுபான விற்பனை நிலையம் பிறவுண் வீதி], பத்மராஜா, பவானி, பவளராணி [பிரான்ஸ்], பாக்கியநாதன் [பிரான்ஸ்], பாமினி ஆகியோரின் அன்புத் தந்தையும் துரைலிங்கம், நித்தியராணி, விஜயலக்சுமி, மாணிக்கராசா [பிரான்ஸ்], ரேவதி [பிரான்ஸ்] ஆகியோரின் மாமனாரும் சிவரெட்ணம், ராசம்மா, இராஜேந்திரன் [வரமுத்து], நல்லம்மா ஆகியோரின் அன்பு மைத்துனரும் சிவா, சிறி, றூபி, ராஜன், பத்மா, பிரியங்கா, அர்ச்சுதன், அரவிந்தன், நிரோஜன், நிரஞ்சன், அன்புராஜ், அற்புதராணி, அபிரா, சிந்து, வைரவி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 10-12-91 இன்று முற்பகல் 11 மணிக்கு அன்னாரின் வளாக ஒழுங்கை திருநெல்வேலி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பஞ்சநாதன் (பஞ்சு) (மகன்)
வளாக ஒழுங்கை,
திருநெல்வேலி.
[19025]

### திருமதி சிவயோகம் முத்துராசா

திருமதி சிவயோகம் முத்துராசா 8-12-91 இல் சிவபதமடைந்தார். அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி க. நாகலிங்கம் (மண்டைதீவு) அவர்களின் அன்பு மகளும், காலஞ்சென்ற திரு திருமதி ஈ. எஸ். ஞானரத்தினம் (கொக்குவில்) அவர்களின் அன்பு சிறிய மகளும், காலஞ்சென்ற திரு S. முத்துராசாவின் அன்பு மனைவியும், தங்கராஜா (ஜேர்மனி)வின் அருமைத் தாயாரும், காலஞ்சென்ற சோதிலிங்கம் (ஆசிரியர்), நாகரத்தினம் (புதுக்குளம்) ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 8-12-91 பி. ப 4.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்:
நா. முனிஐயா,
மற்றும் உறவினர்கள்
கருவேலடிலேன்,
கொக்குவில்.
(19021)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட் ... 11-12-1991 ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org